

மறைந்த காஞ்சிபுரம் மாவட்டக் கழக முன்னாள் கழகச் செயலாளர் – ஆலந்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கண்டோன்மெண்ட் சி.சண்முகம் அவர்கள் உடல் மீது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர்அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, பகுதிச் செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், இ.ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினார்கள்.

### காஞ்சிபுரம் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# ஆலந்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கண்டோன்மெண்ட் சி.சண்முகம் மறைவு !

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் உள்ளிட்ட கழகத்தினர் நேரில் அஞ்சலி!

காஞ்சிபுரம்,ஆக.28-

காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் கழகச் செயலாளர் - ஆலந்தூர்தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கன்டோன் மெண்ட் சி.சண்முகம் மறைந்தார். மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் உள்ளிட்ட கழகத்தினர் நேரில் சென்று அவரது உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் கழகச் செயலாளரும் - ஆலந்தூர்தொகுதி முன்னாள்சட்டமன்ற உறுப்பினருமான கண்டோன்மெண்ட் சி.சண்முகம் (வயது 83) அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் காலமானார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக 1993-ஆம் ஆண்டு முதல் 1999-ஆம் ஆண்டு வரை 6 ஆண்டுகாலம் பணியாற்றினார். ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக 1989- 1991, 1996 -2001 ஆகிய ஆண்டுகளை இரு முறை இருந்துள்ளார்.

கண்டோன்மெண்ட் நகரீய துணைத் தலைவராகவும் இருந்துள்ளார். அப்போது அவர் அகில இந்திய கண்டோன்மெண்ட் தலைவராகவும்இருந்துள்ளார்.

அவருக்கு வெற்றிவேல் என்ற ஒரு மகனும், தேன்மொழி, சாந்தி, கீதா ஆகிய 3மகள்களும் உள்ளனர். அவரது மனைவி கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்துவிட்டார்.

அன்னாரது உடல் கண்டோன்மெண்ட் பட்ரோடு - போரூர் சாலையில் அமைந்துள்ள அவரது வீட்



டில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது மறைவு பற்றிய தகவல் அறிந்தவுடன் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் உடனடியாக மறைந்த கண்டோன்மெண்ட் சி.சண்முகம் இல்லத்திற்கு நேரில் சென்று மலர் மாலை - மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வீ.தமிழ்மணி, ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் பி.குணாளன், ஆலந்தூர்தெற்குபகுதிச்செயலாளர் என்.சந்திரன், பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், இரா.பாஸ்கரன், வட்டச் செயலாளர்கள் நடராஜன்,கண்டோன்மெண்ட் நகரீய முன்னாள் துணைத் தலைவர் மனோகரன் உள்ளிட்ட கழகத்தினர் அவருடன் வந்து மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரது இறுதி சடங்குகள் இன்று மாலை 3:30 மணியளவில் நடைபெறுகிறது. ஆதம்பாக்கம் என்.ஜி.ஓ. காலனியில் உள்ள சுடுகாடு மின் தகன மேடையில் அவரது உடல் தகனம் செய்யப்படுகிறது.






### சென்னை தென்மேற்கு மாவட்டம்

# மயிலாப்பூர் - தியாகராயர் நகர் தொகுதிகளில் வட்டங்கள் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள்!

## மாவட்டக் கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலாப்பூர், தியாகராயர் நகர் தொகுதிகளில் வட்டங்கள் வாரியாக செயல்வீரர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற சட்மன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுகுழு உறுப்பினர்கள், பகுதிச்செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டச்செயலாளர்கள் மற்றும் அந்தந்த வட்டத்திற்குட்பட்ட மாவட்ட, பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டகழக நிர்வாகிகள், மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | பகுதி | தலைமை | வட்டம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 29.08.2024 வியாழன் | மயிலை மேற்கு | D.ராஜவேலு | 121 வது வட்டம் மாலை 6 மணி | ராம்மந்திரி திருமணமண்டபம் (திருவள்ளுவர் சிலை பின்புறம் முண்டக கன்னியம்மன் கோவில்தெரு) |
| | மயிலை மேற்கு | சீ.கிருஷ்ண மூர்த்தி | 121அ வட்டம் மாலை 7 மணி | முருகேசன் நாயக்கர் திருமண மண்டபம் லாயிட்ஸ் ரோடு |
| 01.09.2024 ஞாயிறு | மயிலை மேற்கு | மூ.இ.ஏழுமலை | 123 வது வட்டம் காலை 11 மணி | சமூகநலக்கூடம் கவிஞர் பாரதிதாசன் சாலை, தேனாம்பேட்டை |
| | மயிலை மேற்கு | மூ.ராஜேந்திரன் | 123 அ வட்டம் மதியம் 12 மணி | சமூகநலக்கூடம் கவிஞர்பாரதிதாசன் சாலை, தேனாம்பேட்டை |
| 01.09.2024 ஞாயிறு | தியாகராயர் நகர் கிழக்கு | என்.துரை | 141 வது வட்டம் மாலை 6 மணி | ஆர்த்தி மஹால், முத்துரங்கம் சாலை, தியாகராயர் நகர் |
| | தியாகராயர் நகர் கிழக்கு | எஸ்.லட்சுமி காந்தன் | 141 அ வட்டம் மாலை 7 மணி | MJ மினி ஹால், சி.ஐ.டி நகர் 4வது பிரதான சாலை |
| 02.09.2024 திங்கள் | தியாகராயர் மேற்கு பகுதி | ந.மோ. முரளி | 132 வது வட்டம் மாலை 6 மணி | அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம் கோடம்பாக்கம் |
| | தியாகராயர் மேற்கு பகுதி | கே.எஸ்.வெல்டிங் ராஜா | 132 அ வட்டம் மாலை 7 மணி | விளையாட்டு திடல், கார்ப்பொரேஷன் காலனி 1வது தெரு, கோடம்பாக்கம் |
| 02.09.2024 திங்கள் | மயிலை மேற்கு | S.R.ராஜா சுரேஷ் | 122 வது வட்டம் மாலை 6 மணி | சமூகநலக்கூடம் கவிஞர் பாரதிதாசன் சாலை, தேனாம்பேட்டை |
| | மயிலை மேற்கு | அ.நாகராஜன் | 122 அ வட்டம் மாலை 8.30 மணி | சமூகநலக்கூடம் கவிஞர்பாரதிதாசன் சாலை, தேனாம்பேட்டை |
| 04.09.2024 புதன் | தியாகராயர் நகர் கிழக்கு | ஆர்.சக்திவேல் | 134 வது வட்டம் மாலை 6 மணி | ஷோபனா கல்யாண மண்டபம், ஆர்யா கவுடா ரோடு விரிவு, மேற்கு ரோடு |
| | தியாகராயர் நகர் கிழக்கு | ஜி.பி.செந்தில் குமரன் | 134 அ வட்டம் மாலை 7 மணி | சந்திரசேகர் மினி ஹால் தம்பையா ரோடு |
| 04.09.2024 புதன் | மயிலை கிழக்கு | மா.பா.அன்பு | 124 அ வட்டம் மாலை 7 மணி | P.K. மஹால் |
| | மயிலை கிழக்கு | A.தாஸ் | 124 வது வட்டம் மாலை 8.30 மணி | வாழதோப்பு பள்ளி |
| 07.09.2024 சனிக்கிழமை | தியாகராயர் நகர் கிழக்கு | எம்.எஸ்.பழனி | 135 வது வட்டம் மாலை 7 மணி | பிரியதர்ஷினி ஹால் 7வது, அவென்யூ, அசோக் நகர் |
| 08.09.2024 ஞாயிறு | மயிலை கிழக்கு | துரைப்பார்த்திபன் | 171 வது வட்டம் காலை 10.30 மணி | பருவதராஜகுல மீனவர் மண்டபம் |
| | மயிலை கிழக்கு | பா.பொன்னுசாமி | 171 அ வட்டம் மதியம் 12.30மணி | பட்டினப்பாக்கம் சமுதாயநலக்கூடம் |
| 08.09.2024 ஞாயிறு | தியாகராயர் நகர் கிழக்கு | மு.ம.செந்தில் குமார் | 131 வது வட்டம் மாலை 6 மணி | 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம், அசோக் நகர் |
| | தியாகராயர் நகர் கிழக்கு | எம்.கிருஷ்ண மூர்த்தி | 131 வது அவட்டம் மதியம் 1 மணி | கருணீகர் திருமண மண்டபம் அசோக் நகர் |
| 09.09.2024 வியாழன் | தியாகராயர் நகர் மேற்கு | பி.ஜெயகுமார் | 133 வது வட்டம் மாலை 7 மணி | சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் உஸ்மான் சாலை, தியாகராய நகர் |
| | தியாகராயர் நகர் மேற்கு | பி.மாரி | 133 அ வட்டம் மாலை 7 மணி | சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் உஸ்மான் சாலை, தியாகராய நகர் |
| 11.09.2024 புதன் | தியாகராயர் நகர் மேற்கு | D.கமலஹாசன் | 130வது வட்டம் மாலை 6 மணி | ஆர்த்தி மஹால், வடபழனி |
| | தியாகராயர் நகர் மேற்கு | தட்சன் ஹரிஹரன் | 130 அ வட்டம் மாலை 6 மணி | செங்குத்தா மஹால், குமரன் காலனி, வடபழனி |
| 12.09.2024 வியாழன் | மயிலை கிழக்கு | கோ.கண்ணன் | 126 வது வட்டம் மாலை 6 மணி | லாசரஸ் ஜர்ஜ் ரோடு, கண்ணாடி மாளிகை |
| 12.09.2024 வியாழன் | தியாகராயர் நகர் கிழக்கு | மு.செல்வகுமார் | 135 அ வட்டம் மாலை 7 மணி | புனித மத்தேயாஸ் ஆலயத் திருமண மண்டபம், காமராஜர் சாலை |
| 15.09.2024 வியாழன் | மயிலை கிழக்கு | வி.வெற்றிவேல் | 125 அ வட்டம் காலை 11 மணி | சக்தி கல்யாணம் மண்டபம் |
| | மயிலை கிழக்கு | அ.தவநேசன் | 125 வது வட்டம் மதியம் 12.30 மணி | அம்பேத்கார் பாலம் சமுதாய நலக்கூடம் |

கூட்டம் குறித்து சம்மந்தப்பட்ட வட்டக்கழக செயலாளர்கள் முறையாக அழைப்பிதழ்களை வட்டங்களில் உள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும் வழங்கி கழகத்தினர் பெரும் அளவில் கலந்து கொள்ள கூட்டம் ஏற்ப்பாடு செய்திட வேண்டுகிறேன்.

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.





சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கழக துணைச் செயலாளர் சொ.முருகையனின் புதல்வி பாரதி முருகையனுக்கு சொந்தமான 'ஆர்.பி. மேக் ஓவர் ஸ்டுடியோ" எனும் அழகு நிலையத்தை மாவட்டக் கழகச் செயலாரும் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், மேற்குப் பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்டப் பிரதிநிதி சைதை எஸ். ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னணியினர் பங்கேற்றனர்.